# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

## போராடும் LIC ஊழியர்களுக்கு தோள் கொடுப்போம்

அன்பார்ந்த தோழர்களே,

காப்பீட்டு துறையில் அந்நிய நேரடி முதலீட்டின் அளவை அதிகரிக்கும் இன் சூரன்ஸ் சட்ட திருத்த மசோதா-2008 இந்திய பாராளுமன்ற மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டு காத்திருப்பில் உள்ளது. அங்கு ஆளும் பாஜக அரசுக்கு பெரும்பான்மை இல்லாத நிலையில் நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு மாறாக மார்ச் 3ஆம் தேதி அந்த மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்தது. இது தவறான நடைமுறை என்பதால், இதனை எதிர்கட்சிகள் கடும் கண்டனத்தை தெரிவித்தன. ஆனால் அவை அனைத்தையும் மீறி, மக்களவையில் தனக்குள்ள பெரும்பான்மையை வைத்துக் கொண்டு மார்ச் 4ஆம் தேதி அந்த மசோதாவை நிறைவேற்றியது.

இதனை கண்டித்து மார்ச் 9ஆம் தேதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்திற்கு அகில் இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்கம் அறை கூவல் விட்டுள்ளது.

அவர்களின் வேலை நிறுத்த போராட்டம் வெற்றி பெற தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறது. **அன்று இன்சூரன்ஸ் ஊழியர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டக் கூட்டங்களில் நமது தோழர்களும் பெருமளவில் கலந்துக் கொண்டு அவர்களுக்கு தோள் கொடுக்க வேண்டும்.** கிளை/மாவட்ட செயலாளர்கள், LIC ஊழியர் சங்க தலைவர்களுடன் கலந்துக் பேசி, அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தும் இடங்களுக்கு நமது தோழர்களை பெருமளவில் திரட்டி சென்று ஆதரவினை தெரிவிக்க வேண்டுகிறோம்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**